**சிலாபம் பிரதேச சபை - 2024**

---------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சிலாபம் பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சிலாபம் பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமா்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் சிலாபம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 541,562 பெறுமதியான 05 வகையான சொத்துக்கள் நடைமுறயைல்லாச் சொத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அந்த சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் நிலையான சொத்துக்கள் தொடர்பான விடய உத்தோகத்தர் மூலம் பெற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாடுகள், முதலீடுகள் மற்றும் நிதி செயற்பாடுகளில் இருந்து ஆண்டில் உருவாகிய தேறிய காசுப்பாய்ச்சலின் கூட்டுமொத்தம் ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் கூட்டுப்பெறுமதி சேர்க்கப்படும் இடத்தில் அந்த ஆண்டின் இறுதியில் காணப்படுகின்ற காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் கூட்டுப் பெறுமதிக்கு சமமாக இருக்க வேண்டிய போதிலும் சபையினால் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றில் மேற்கூறப்பட்ட மீதிகளில் ரூபா 216,691,183 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்குரியதாக தயாரிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது ஏற்பட்டிருந்த தவறை ஏற்றுக்கொள்வதுடன் அது தொடர்பான விடயங்களைக் கண்டறிந்து அதனை சரி செய்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காசுப் பாய்ச்சல் கூற்று சரியாகத் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 கணக்கு மீதிகளின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்கும் பட்டோலைகளின் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 8,216,812 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | உரிய வேறுபாடுகள் தொடர்பான விடயங்களைக் கண்டறிந்து அதனைச் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பட்டோலைகளின் மீதிக்கும் கணக்கு மீதிகளுக்கும் இடையில் காணப்படுகின்ற வேறுபாடுகளை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாய சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| | நிதிப்பிரமாணம் 571(2) ஆம் பிரிவு | 02 வருடங்களை விஞ்சிய ரூபா 1,540,466 ஆன வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விடய உத்தியோகத்தருக்கு அறிவித்து விடுவிப்பதற்கோ அல்லது வருமானத்திற்கு எடுப்பது தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2014 ஒக்தோபர் 01 ஆந் திகதிய இலக்கம் 1822/22 அதிவிசேட வர்த்தமானி | | | |
| | iv (ஆ) இன் 05(1) மற்றும் 06 ஆம் பிரிவுகள் | காணிகள் கூறிடும் நிலத் திட்டம் சபையின் தலைவரால் அங்கீகரிக்க முன் மற்றும் அபிவிருத்தி நிபந்தனைகளை பூர்த்தி செய்வதற்கு முன் கூறுகளாக்கப்பட்ட காணிப் பகுதிகளை உரித்தற்றதாக்குதல், விற்பனை செய்தல், கையளித்தல் அல்லது காணி கூறுகளை விற்பனை செய்வதற்காக அறிவித்தல்களை பகிரங்கப்படுத்த முடியாது இருந்த போதிலும் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் | இது தொடர்பாக உரிய நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கூறுகளாக்கப்பட்டு விற்பனை செய்வதற்கு தயார் செய்யப்பட்டிருந்த 04 காணிகளுக்கான அறிவித்தல்கள் பகிரங்கப்படுத்தப்பட்டதுடன் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னரும், அபிவிருத்தி நிபந்தனைகளை பூர்த்தி செய்வதற்கு முன்னரும் காணிகளில் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | 2015 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 1929/45 என்ற அதிவிசேட வர்த்தமானி | | | |
| | 06(01) (அ) மற்றும் (ஆ) பிரிவுகள் | கூறுகளாக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற காணிகளில் பொது வசதிகளுக்காக சபைக்கு உரித்தாக வேண்டிய காணிப்பகுதிக்கு உரிய உரித்து மற்றும் வீதி முறைமைகளின் உரித்து பதிவு செய்யப்பட்ட உரித்துறுதியின் மூலம் பிரதேச சபைக்கு கையளிக்க வேண்டியிருந்த போதிலும் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் சபை அதிகாரப் பிரதேசத்தில் கூறுகளாக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டிருந்த 04 காணிகள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக அபிவிருத்தி நிபந்தனைகளில் உள்ளடக்கப்படுவதுடன் பதிவு செய்யப்பட்டு உரித்துறுதி வழங்காத நிறுவனங்களுக்கு அறிவித்து விரைவாக உரித்துறுதியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2019 சனவரி 10 ஆந் திகதி இலக்கம் வ.ப.பா.தெ/01/11/04/01 என்ற உள்ளூராட்சி ஆணையாளரின் (வடமேல்) சுற்றறிக்கை | | | |
| | 5 ஆம் பிரிவு | ஆகக் குறைந்தது 03 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட்ட வாடகை திருத்தப்பட | புதிய மதிப்பீடொன்று மதிப்பீட்டுத் திணைக்களத்தில் இருந்து கோரப்பட்டிருந்த போதும் இந்த கடைகள் வாடகைக்கு வழங்குவதற்கு | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளாமல் முன்னர் காணப்பட்ட வாடகையில் 10 சதவீதம் சேர்க்கப்பட்டு மாதம்பே மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகில் உள்ள 12 வியாபாரக் கொட்டகைகள் 2025 ஆம் ஆண்டு முதல் எதிர் வரும் 02 வருடங்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டு இருந்தது. | குறித்துரைத்த திகதி வரையில் மதிப்பீடு கிடைக்காமையினால் காணப்பட்ட வாடகையில் 10 வீதம் சேர்த்து வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது. | வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 91,429,548 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 144,347,101 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | **2024** | | | | **2023** | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| i. | ஆதன வரியும் வரியும் | 11,024 | 10,510 | 10,215 | 4,762 | 10,135 | 11,393 | 11,669 | 4,473 |
| ii. | வாடகை | 12,603 | 6,830 | 6,775 | 4,314 | 9,625 | 9,993 | 8,775 | 4,388 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,150 | 1,321 | 1,321 | - | 1,050 | 1,132 | 1,132 | - |
| iv. | ஏனைய வருமானம் | 26,541 | 18,347 | 18,347 | - | 11,986 | 29,906 | 29,906 | - |
| | மொத்தம் | 51,318 | 37,008 | 36,658 | 9,076 | 32,796 | 52,424 | 51,482 | 8,861 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| i. மீளாய்வாண்டின் இறுதியில் ஆதனவரி நிலுவை ரூபா 4,285,795 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையில் 01 வருடத்திற்கு மேற்பட்ட 03 வருடங்களுக்கு குறைந்த ரூபா 1,957,528 நிலுவை மீதியும், 03 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 1,223,455 நிலுவை மீதியும் காணப்பட்டது. இந்த மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | நிலுவை ஆதனவரிகளை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி உரிமையாளர்களிடம் இருந்து அறவிட வேண்டிய நிலுவை ஏக்கர் வரித் தொகை ரூபா 309,188 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையில் ரூபா 115,204 தொகை 01 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையிலான காலத்தில் இருந்தும், ரூபா 122,555 தொகை 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் இருந்தும் அறவிட வேண்டி இருந்தது. | நிலுவை மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | நிலுவை ஏக்கர் வரியை விரைவாக அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ) வாடகை** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வாடகை ரூபா 4,314,398 ஆகும். அதில் 01 இற்கும் 03 வருடங்களுக்கு இடையில் ரூபா 1,152,214 தொகையும், 03 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை வாடகை ரூபா 349,735 தொகையும் காணப்பட்டது. | நிலுவை வாடகையை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | நிலுவை கடை வாடகையை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2005 ஆம் ஆண்டில் தனியார் கம்பனியினால் கூறுகளாக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்ட கறுக்குவட்டவன கஜுகெலே வத்த என்ற பெயருடைய காணியில் பொது வசதிகளுக்காக சபைக்கு ஒதுக்கப்பட்டிருந்த 115 பேர்ச் நிலப் பகுதியை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக அந்த நிலப்பகுதி வேறு தரப்பினருக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. | சட்ட விரோதமாக காணிகள் கூறுகளாக்கி விற்பனை செய்வதற்கு எதிராக தனியார் கம்பனிக்கு 2023 மார்ச் 16 ஆந் திகதி வழக்கு ஒன்று தொடரப்பட்டுள்ளது. | சபைக்குரிய காணிகளை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 01 ஏக்கர் 02 றூட் பரப்பளவை உடைய குறுமுதென்ன கெலே காணி 2021 ஆம் ஆண்டில் கம்பனியால் அனுமதியற்ற வகையில் கூறுகளாக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் அந்த காணியில் சபைக்கு உரித்தான 40 பேர்ச் அளவான பொதுக் காணிப் பகுதியை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்தக் காணிகளை கூறுகளாக்கியதன் மூலம் சபைக்கு செலுத்த வேண்டிய 01 சதவீத வரித் தொகை அறவிட்டு பொதுக் காணியின் பெறுமதிக்கு சமமான விலை ஒன்றில் சபைக்கு அறவிடுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | சபைக்குரிய சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த கடன் கொடுத்தோர் கணக்கின் மீதிகளின் பெறுமதி ரூபா 83,689,135 ஆக இருந்ததுடன் அதில் 03 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 375,000 மீதியும் காணப்பட்டது. இவற்றின் இருப்பை உறுதிப்படுத்தி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதிகளை விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இருப்பினை உறுதிப்படுத்தி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சிலாபம் சபையின் முன்னேஸ்வரம் ஓய்வு மண்டப்பத்தின் வாடகையாளர் 2022 சனவரி மாதம் முதல் வாடகைப் பணம் செலுத்துதலை புறக்கணித்ததன் காரணமாக வாடகை உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்காக 1½ வருடம் அளவிலான காலம் எடுத்திருந்தது. 2024 சனவரியில் வாடகை உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டதன் பின்னர் வாடகையாளர் அனுமதியற்ற வகையில் குடியிருந்து வருவதுடன் 2022 சனவரி முதல் 2024 திசெம்பர் வரை ரூபா 05 மில்லியன் வருமானம் இழக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காத சந்தரப்பத்தின் போது தேவையான நடவடிக்கைகள் எடுக்க தாமதம் அடைந்ததன் காரணமாக இவ்வாறான நிலைமை எழுந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | வாடகையாளரிடம் இருந்து நிலுவை வாடகைப் பணத்தை அறவிடுவதற்காக சிலாபம் நீதவான் நீதிமன்றத்தில் 63136 என்ற வழக்கு இலக்கத்தின் கீழ் வழக்கொன்று தொடரப்பட்டுள்ளதுடன் உரித்தினைக் கையேற்பதற்காக வழக்கை தொடர்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டில் ரூபா 3,276,053 செலவில் நிர்மாணிக்கப்பட்ட புளியன்கடவற ஆயர்வேத நிலையத்தை ஆரம்பிக்காமல் 02 வருட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது. | ஆயர்வேத வைத்தியரை சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதி ரூபா 60,605,936 ஆன 104 வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 25,479,268 ஆன 50 நிர்மாண வேலைகள் வருடத்தில் பூர்த்தி செய்வதற்கு முடியாது இருந்தது. | 2024 ஆம் ஆண்டில் திசெம்பர் மாதத்தின் போது உடன்படிக்கை செய்யப்பட்ட 33 நிர்மாணங்களின் வேலைகள் அந்த ஆண்டு முடிவடைதற்கு முன்னர் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்ததை ஏற்றுக் கொள்வதுடன் தற்போது அந்த உடன்படிக்கை செய்யப்பட்ட நிர்மாண வேலைகளில் 33 வேலைகளில் 22 வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு உரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br>எஞ்சியுள்ள 11 நிர்மாணங்களும் இயலுமான வரையில் கூடிய விரைவில் பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஆண்டில் பாதீடு செய்யப்பட்ட பணிகளை அந்த ஆண்டிலேயே நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டில் உடன்படிக்கை செய்யப்பட்ட ரூபா 1,344,368 ஆன 04 நிர்மாண வேலைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | 03 நிர்மாண வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு நிர்மாணம் இரத்து செய்யப்பட்டுள்ளது. | ஆண்டில் பாதீடு செய்யப்பட்ட பணிகளை ஆண்டின் போதே நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் உடன்படிக்கை செய்யப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 996,020 தொகையான இரண்டு செயற்திட்டங்களின் உடன்படிக்கைக் காலம் முடிவடைந்து 06 மாதங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும் அந்த செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | மாலஹேன பீரிஸ் வத்த வீதி கொங்கிரீட் இடுவதற்கு உரிய வேலை ஆரம்பிப்பதற்கு தேவையான பொருட்கள் வழங்கி பிரதேசத்திற்கு கொண்டு சென்று போடப்பட்டுள்ளதுடன் பாயின் ஹொட்டல் வீதியில் காணப்படுகின்ற மழையுடன் கூடிய காலநிலை சீராகியவுடன் உடனடியாக உரிய வேலைகளை கூடிய விரைவில் பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | ஆண்டில் பாதீடு செய்யப்பட்ட பணிகளை ஆண்டிலேயே நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் இரண்டாம் தரத்தில் 19 பதவிகளும், ஆரம்ப தரத்தில் 11 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் இரண்டாம் தரத்தில் 16 மற்றும் ஆரம்ப தரத்தின் பதவிகள் 12 மிகையாகக் காணப்பட்டது. | இரண்டாம் தரத்தின் 02 பதவிகளுக்கு சேவை உயர்வின் அடிப்படையிலும், உள்ளூராட்சி ஆணையாளரின் இடமாற்றக் கட்டளையின் பிரகாரம் இடம்பெற்றதுடன் ஏனைய வெற்றிடங்கள் முன்னிருந்து காணப்படுகின்ற வெற்றிடங்கள் ஆகும். 16 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் முன்னிருந்து காணப்படுகின்ற மிகை ஆகும். | வெற்றிடமான பதவிகளை நிரப்புவதற்கும், மிகையான பதவிகளை அங்கீகரித்துக் கொள்வதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கடந்த ஆண்டுகளின் போது சேவையை விட்டுச் சென்ற, வேலை நீக்கம் செய்யப்பட்ட மற்றும் இடமாற்றலாகிச் சென்ற 50 ரூபா 363,182 கடன் மீதி அறவிட வேண்டி இருந்தது. | சேவையை விட்டுச் சென்றதால் வழங்கப்பட்ட ஊழியர்களின் பிணையின் அடிப்படையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் ஏனைய கடன் மீதிகளையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொருத்தமான மற்றும் சரியான மதிப்பீடு தயாரிக்காமை மற்றும் திட்டமிடப்பட்ட பிரகாரம் பாதீடு செய்யப்பட்ட பணிகளை நிறை வேற்றப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டில் 107 செலவின விடயங்களுக்கு உரியதாக வழங்கப்பட்ட ரூபா 23,754,500 மொத்த நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. | தேர்தல் காலத்தின் காரணமாக நிகழ்ச்சித் திட்டங்கள் கைவிடப்பட்டமையால் 04 செலவின விடயங்களின் நிதியேற்பாடும், பிரதேச சபைகள் சட்டத்தின் 132 ஆம் பிரிவின் பிரகாரம் அங்கீகாரம் கிடைக்காமையின் அடிப்படையில் 04 செலவின விடயங்களின் நிதியேற்பாடும், ஆயர்வேத வைத்தியரின் சேவைக்காலம் முடிவடைந்தமையால் மருத்து உபகரணங்களை கொள்வனவு செய்வதற்குரிய நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டதுடன் 03 செலவின விடயங்களின் நிதியேற்பாடு கடன் கொடுத்தோர் ஆக்கப்பட்டு எதிர்வரும் ஆண்டில் அமுல்படுத்தப்படும். | மதிப்பீடு செய்யப்பட்ட செலவின விடயங்களுக்குரிய காலத்தில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் 17 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்கண்டு அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான 61 செயற்பாடுகள் மீளாய்வாண்டில் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. சபையினால் ரூபா 1,210,311 செலவில் 53 செயற்பாடுகள் மாத்திரம் மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |